## பாடம் - 7. நீதிநெறி விளக்கம்

**பாடம்: தமிழ்**

**வகுப்பு: 4**

### அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. 'நவை 'என்னும் சொல்லின் பொருள் ________

அ) அச்சம் ஆ) மகிழ்ச்சி இ) வருத்தம் ஈ) குற்றம்

2. 'அவையஞ்சி' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________

அ) அவைய + அஞ்சி ஆ) அவை + அஞ்சி இ) அவை + யஞ்சி ஈ) அவ் + அஞ்சி

3. 'இன்னலம்' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______

அ) இன் + னலம் ஆ) இன் + நலம் இ) இனிமை + நலம் ஈ) இனிய + நலம்

4. 'கல்லார்' - இச்சொல்லின் எதிர்ச்சொல் ___________

அ) படிக்கா தவர் ஆ) கற்றார் இ) அருளில்லாதவர் ஈ) அன்பில்லா தவர்

### ஆ. வினாக்களுக்கு விடையளிக்க.

**1. கல்வி கற்றவரின் இயல்பு எவ்வாறு இருக்க வேண்டும்?**

பலர் நிறைந்த அவையிலே உடல் நடுங்காமல் தம் கருத்தை தடுமாறாமல் எடுத்துக் கூறவேண்டும்.

**2. பொருளற்ற சொற்களை அவையினர் முன் பேசுபவர் யார்?**

பொருளற்ற சொற்களை அவையினர் முன் பேசுபவர் கல்வியறிவில்லாதவர் ஆவர்.

**3. பூத்தலின் பூவாமை நன்று என்று நீதிநெறி விளக்கம் எவற்றைக் குறிப்பிடுகிறது?**

- அவைக்கு அஞ்சி தம் கருத்தை எடுத்துக் கூற முடியாமல் தடுமாறுபவர் கல்வி.
- கல்வியறிவில்லாதவர் பேசம் பொருளற்ற ஆரவாரச் சொல்.
- செய்யத்தக்கவற்றைச் செய்யாமையால் ஏற்படும் குற்றத்துக்கு அஞ்சிப் பிறருக்குக் கொடுத்து எஞ்சியவற்றை உண்ணாதவரின் செல்வம்.
- வறுமையுற்றவரிடத்தே உள்ள ஈகை போன்ற இனிய பண்புகள் - ஆகியவற்றை நீதிநெறி விளக்கம் பூத்தலின் பூவாமை நன்று என்று குறிப்பிடுகிறது.

### இ. முதல் எழுத்து ஒன்றிவரும் சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுக.

1. அவையஞ்சி - அவையஞ்சா
2. பூத்தலின் - பூவாமை
3. கல்வியும் - கல்லார்

# மொழியோடு விளையாடு

## ஈ. குறிப்புகளைப் படி. சொல்லிலிருந்தே சொல்லைக் கண்டுபிடி.

| | | |
|---|---|---|
| விலங்குகள் வாழுமிடம் | பாலைவனம் | வனம் |
| பூவின் வேறு பெயர் | பொன்மலர் | மலர் |
| பிறருக்குக் கொடுப்பது | கொடைக்கானல் | கொடை |
| விலங்குகளுக்கு மட்டும் உண்டு | வௌவால் | வால் |
| பால் தரும் வீட்டுவிலங்கு | கடற்பசு | பசு |

## உ. சங்குச் சக்கரத்தைச் சுழற்றிக் கல்வியின் பெருமைகளை உணர்த்தும் சொற்றொடர்களை முறையாக எழுதுக.




1. கல்வி கண் போன்றது.
2. கல்விக்கு நிகர் ஏதுமில்லை.
3. கல்வியே அழியாச் செல்வம்.

## ஊ. கூடுதல் வினாக்கள்.

**1. நீதிநெறி விளக்கம் பெயர் காரணம் என்ன?**

நீதிநெறிகளை விளக்குவதற்குக் கருவியாக இருப்பதால் இந்நூல், நீதிநெறி விளக்கம் எனப் பெயர் பெற்றது.

2. நீதிநெறி விளக்கம் என்ற நூலை எழுதியவர் யார்?

நீதிநெறி விளக்கம் என்னும் நூலை எதியவர் குமரகுருபரர் ஆவார்.